# பருத்தி விலை நிலையாக இருக்கும்

உலகளவில், சர்வதேச பருத்தி ஆலோசனை குழு (ICAC) தகவலின் படி, 2014-15ம் ஆண்டில் பருத்தி உற்பத்தியில் சீனாவை பின்னுக்கு தள்ளி இந்தியா முதலிடம் பெற்றது. அமெரிக்கா விவசாய துறை கணிப்பின் படி, உலக பருத்தி உற்பத்தியில் அடுத்த பருவத்திலும் இந்தியா 27 சதவீதம் பங்களித்து தனது நிலையை தக்க வைத்து கொள்ளும். இந்தியாவை தவிர பருத்தி உற்பத்தி செய்யும் மற்ற முக்கிய நாடுகளில் உற்பத்தி முந்தைய பருவத்தை விட குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெற்கு இந்தியா ஆலை சங்கம் (SIMA) கூறியுள்ளது.

இந்திய பருத்தி கழகம், 2015-16ம் ஆண்டில் பருத்தி உற்பத்தி 5.7 சதவீதமாக குறையும் என மதிப்பிட்டுள்ளது. 2014-15ம் ஆண்டில் 382.75 இலட்சம் பேல்களாக இருந்த பருத்தி உற்பத்தி 2015-16ம் ஆண்டில் 362 இலட்சம் பேல்களே இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, 2015-16ல் பருத்தி உற்பத்தி மற்றும் நுகர்வு குறையவே வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

பஞ்சாப், ஹரியானா மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களில் வெள்ளை ஈ தாக்குதலினாலும், குஜராத், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் போதிய மழை இல்லாத காரணத்தாலும், 2015-16ம் ஆண்டுக்கான கணிக்கப்பட்ட 390 இலட்சம் பேல்கள் உற்பத்தியில் 10 - 15 இலட்சம் பேல்கள் குறைய வாய்ப்புள்ளது. 2014-15ல் பருத்தி ஏற்றுமதி 70 இலட்சம் பேல்களாக இருக்கும் என பருத்தி ஆலோசனை வாரியம் கணித்தது. ஆனால் 55 இலட்சம் பேல்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் தருமபுரி, திருவண்ணமலை, வேலூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் பருத்தி விளைவிக்கப்படுகின்றன. மழை, பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் சென்ற வருடத்தை விட இந்த வருடத்தில் 40 சதவீதம் பருத்தி உற்பத்தி குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் கொங்கணாபுரம் சந்தையில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட தரமான நீண்ட இழை பருத்தி குவிண்டாலுக்கு ரூ.6000 வரை விற்கப்படுகிறது. பருத்தி உற்பத்தி மற்றும் வரத்து குறைவாக இருந்தாலும் மழைக்கால ஈர இழை, தரம் குறைந்து காணப்படுவதாலும் மற்றும் பருத்தி ஏற்றுமதியில் தடை இருப்பதாலும், எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை.

இச்சூழலில் பருத்தி விவசாயிகள் பருத்தி விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த ஒன்பது வருட மாதந்திர பருத்தியின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்து வர்த்தக ஆய்வும் மேற்கொண்டது.

பொருளாதார ஆய்வு முடிவின்படி, நீண்ட இழை பருத்தியின் பண்ணை விலை ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.5,500 முதல் ரூ.5,800 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-2456297